# ரஷ்யாவின் மிக உயரிய அரச விருதைப் பிரதமர் பெறுகிறார்

ஜூலை 09, 2024

கிரெம்ளினில் உள்ள செயின்ட் ஆண்ட்ரூ ஹாலில் நடைபெற்ற சிறப்பு விழாவில், ரஷ்ய கூட்டமைப்பின் தலைவர் மாண்புமிகு திரு. விளாடிமிர் புடின், இந்தியா-ரஷ்யா உறவுகளை மேம்படுத்துவதில் பிரதமர் திரு. நரேந்திர மோடி அளித்த பங்களிப்பிற்காக ரஷ்யாவின் மிக உயர்ந்த தேசிய விருதான "தி ஆர்டர் ஆஃப் செயின்ட் ஆண்ட்ரூ தி அப்போஸ்தல்" ஐ பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கினார். இந்த விருது 2019 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டதாகும்.

2. இந்த விருதைப் பெற்றுக் கொண்ட பிரதமர், இந்திய மக்களுக்கும், இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான பாரம்பரிய நட்புறவுக்காகவும் இந்த விருதை அர்ப்பணித்தார். இந்த அங்கீகாரம் இரு நாடுகளுக்கும் இடையிலான சிறப்பு மற்றும் சிறப்புமிக்க மூலோபாய கூட்டாண்மையை எடுத்துக்காட்டுவதாக அவர் மேலும் கூறினார்.

3. இந்த விருது 300 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டதாகும். இந்த விருதைப் பெறும் முதல் இந்தியத் தலைவர் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் ஆவார்.

**மாஸ்கோ**
**ஜூலை 09, 2024**